**அ.வ.எண்.118/2018 வா.சா.1 – செந்தில்நாதன் 04.08.2025**

**இ.ம.எண்.23/2025 அனுமதிக்கப்பட்டதின்பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 1 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

ஆரம்பிக்கும் நேரம் **4.20** மணி

வா.சா.ஆ.3 ஆக தாக்கல் செய்துள்ள ஆவணம் கரூர் இந்து சமயஅறநிலையத்துறையின் செயல்முறைகள் என்றால் சரிதான். மேற்சொன்ன வா.சா.ஆ.3 ஆவணத்தின் வாயிலாகதான் வாதி கோவில் 3 நபர்களை அறங்காவலர்களாக என்னை உட்பட நியமித்துள்ளார்கள். அவர்களின் பதவிக்காலம் இரண்டு ஆண்டுகள் என்றால் சரிதான். இரண்டு வருட காலம் முடிவடையப்பட்டதால் இன்றுவரை நீங்கள்தான் அறங்காவலராக வாதி கோவில் இருப்பதற்கான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நீங்கள் தாக்கல் செய்துள்ளீர்கள் என்பது தவறு என்றால் சரியல்ல. உங்கள் டிரஸ்ட் ஸ்ரீ ஆனுரம்மன் பயிரகுல கல்வி சமய சமூக நல அறக்கட்டளை கல்வி மற்றும் சமூகம் சேர்ந்தவைதான் தவிர வாதி கோவில் செயல்முறைகள் குறித்து உருவாக்கப்பட்டதல்ல என்று சொன்னால் தவறு. 2012 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட Trust Deed ஐ எங்கு பதிவு செய்துள்ளீர்கள் என்றால் பல்லடத்தில் பதிவு செய்துள்ளோம். Trust Deed ஐ தாக்கல் செய்யாததற்கு குறிப்பிட்ட காரணம் ஏதாவது உண்டா என்றால் குறிப்பிட்ட காரணம் இல்லை. Trust ன் நோக்கம் வாதி கோவிலுக்கு ஆக

உருவாக்கப்படவில்லை, ஆகையால்தான் நீங்கள் Trust Deed ஐ நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. வாதி கோவிலுக்கும், Trust Deed க்கும் எந்தவொரு சம்மந்தமும் இல்லையென்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணத்தில் பக்கம் 2 ல், 5 வது பத்தியில் இனாம் ஒழிப்பு விசாரணையின்போது தனி நபர்களுக்கு பட்டா வழங்கப்பட்ட நிலங்கள்போக தனிநபர் ஆக்கிரமிப்பை சட்டபூர்வமாக அகற்ற கடமைப்பட்டவர்கள் என உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.26, 28 ல் ரயத்துவாரி பட்டா வழங்கிய நபர்களின் நிலங்கள் உள்ள பட்டா வழங்கிய நபர்கள் உட்பட அனைத்து நபர்கள்மீதுதான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நீங்கள் பட்டா வழங்கப்பட்ட நபர்கள்மீது வழக்கு தொடர்ந்துள்ளதால் வா.சா.ஆ.3 ஆவணத்தில் கண்டுள்ள பக்கம் 2 ல், பத்தி 5 க்கு விரோதமாகதான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணத்தில் வழக்கு தொடர கொடுத்த உத்திரவிற்கு எதிராக கடந்த 28.07.2018 ஆம் தேதியில் கோவில் ஆக்கிரமிப்பு குறித்து உங்களுக்கு மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம், மதுரை கிளையால் ரத்து செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, அந்த உத்திரவில் அறங்காவலருக்கு வழக்கு தொடர நேரடியாகவும் உத்திரவு செய்யப்பட்டுள்ளது. நீங்கள் குறிப்பிடுவதுபோல் அறங்காவலர்களுக்கு அதிகாரம் உள்ளது என மாண்புமிகு உயர்நீதிமன்றம் உத்திரவு

பிறப்பிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. கோவில் சர்வே எண்.28/2 ல் வண்டிப்பாதையை நீங்கள் ஆக்கிரமித்துவிட்டீர்கள் என வட்டார வளர்ச்சி அலுவலரிடம் பிரதிவாதிகள் மற்றும் சிலர் புகார் மனு கொடுத்துள்ளனர் என்று சொன்னால் சரிதான். மேற்சொன்ன இடத்தை வட்டார வளர்ச்சி அலுவலர் அளவீடு செய்ய வந்தார்கள் என்றால் பிரதிவாதிகள் இடத்தை அளக்கவிடவில்லை. இது சம்மந்தமாக 10.07.2025 ஆம் தேதியன்று மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் சிறப்பு வட்டாட்சியரை நியமித்து பனிரெண்டு வாரத்திற்குள் உத்திரவு பிறப்பிக்கும்படி குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரிதான். பொதுவாக வில்லங்க சான்றிதழ் போட்டுதான் வழக்கு தாக்கல் செய்வார்கள் என்றும், அவ்வாறு போடப்பட்ட வில்லங்க சான்றினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் சரியாக ஞாபகம் இல்லை. பிரதிவாதிகள் நிலம் வாங்குவதற்கு முன்பாக நிலங்கள் எத்தனை நபர்கள் மீது கிரையம் செய்யப்பட்டுள்ளது என்று நீங்கள் பார்த்துள்ளீர்களா என்றால் இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகுதான் விபரங்கள் தெரியவந்தது. இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையரால் ஏன் அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் தாவாச்சொத்தனை அளப்பதற்கு வந்தபோது பிரதிவாதிகள் நீதிமன்ற ஆணையரை தாவாச்சொத்தை அளக்கவிடாமல் செய்ததால்தான் நீதிமன்ற ஆணையரால் அறிக்கை தாக்கல் செய்ய இயலவில்லை. இவ்வாறு

நீங்கள்தான் பதில் அளிக்கிறீர்கள் என்றும், நீதிமன்ற ஆணையர் ஏதாவது குறிப்பாணை தாக்கல் செய்துள்ளாரா என்றால் அதைப்பற்றி ஞாபகம் இல்லை. நீங்கள்தான் நீதிமன்ற ஆணையரை நிலத்தை அளக்கவிடாமல் செய்கிறீர்கள் என்றும், ஏனென்றால் நிலத்தை அளந்தால் நீங்கள் ஆக்கிரமித்த விபரங்கள் வெளியேவந்துவிடும் என்பதால் நீங்கள்தான் தாவாச்சொத்தினை அளக்கவிடவில்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் பெற்ற கிரையம், முன்பாத்தியஸ்தர் பெற்ற கிரையம் அனைத்தும் போலிகிரையமா அல்லது உண்மையான கிரையமா என்பதை நிரூபணம் செய்ய சார்பதிவாளரையோ, அல்லது அரசு அதிகாரியையோ இவ்வழக்கில் ஒருதரப்பிரனராக சேர்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் நிலத்தை வாங்கிய பிறகு பாதைக்காக பஞ்சாயத்து ஒரு பகுதியை கொடுத்துள்ள விபரம் உங்களுக்கு தெரியுமா என்றால் இல்லை, அது தவறு. வாதுரையில் நளாயினி உங்கள் நிலத்திற்கு பக்கத்தில் குவாரி புளூமெட்டல்ஸ் வைத்துள்ள விபரம் உங்களுக்கு தெரியுமா என்றால் குவாரி வைத்திருப்பது தெரியும், நளாயினி வைத்திருப்பது தெரியாது. மேற்படி நளாயினி வழக்கு தாக்கல் செய்து, வழக்கில் நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு நளாயினிதான் வழக்குச்சொத்தின் சுவாதீனத்தில் இருப்பதாக அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் தெரியாது, சரியாக ஞாபகம் இல்லை. பிரதிவாதிகள் மற்றும் அவர்களது முன்பாத்தியஸ்தர்களுக்கு கொடுத்த ரயத்துவாரி பட்டா உங்களிடம்

காட்டும்போதுதான் தெரியும் என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல. ரயத்துவாரி பட்டா அரசு தனிநபர்களுக்கு எழுதிக்கொடுத்த ஒரு கிரைய ஆவணம் போன்றது என்று சொன்னால் தவறு. ரயத்துவாரி பட்டா கொடுத்தது என்றும், முன்பாத்தியஸ்தர்கள் அதனடிப்படையில் கிரையம் பெற்றது தவறு என்றும், அரசு அதிகாரிகளை இந்த வழக்கில் ஒர் தரப்பினராக சேர்த்திருக்கவேண்டும் என்றும், அவ்வாறு சேர்க்காதது தவறு என்று சொன்னால் தவறு. வழக்குச்சொத்திற்கு நேரடியாக தொடர்புடைய அரசினை நீங்கள் முக்கிய தரப்பினராக சேர்க்கவில்லை என்றும், வருவாய் துறையினரை நீங்கள் தரப்பினராக சேர்க்கவில்லை என்றும், பதிவுதுளை மற்றும் பத்திரத்துறையை நீங்கள் தரப்பினராக சேர்க்கவில்லை என்றும், இந்து சமய அறநிலையத்துறை, பிரதிவாதிகளின் முன்பாத்தியஸ்தர்கள் இவர்களை யாரையும் தரப்பினராக சேர்க்காமல், சட்ட வரையறையை மீறி தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கு அடிப்படை ஆதாயமற்றது என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் செல்லா நிலை ஆவணம் என்று சொன்னால் அது தவறு. வாதுரையில் வழக்குச்சொத்தில் வாதியின் அனுபவத்தில்தான் உள்ளது என்று கூறியுள்ளீர்கள் என்றால் சரிதான். சுவாதீன ஒப்படைப்பு பரிகாரம் கேட்டுள்ளீர்கள் என்றால் ஒரு சில இடத்தை ஆக்கிரமித்தால் அதனை ஒப்படைக்க பரிகாரம் கேட்டுள்ளேன். வாதுரையில் சொல்லப்பட்டுள்ள சரத்துக்களும், பரிகாரத்தில் கோரியுள்ள சரத்துக்களும் ஒன்றுக்கொன்று

முரண்பாடாக உள்ளது என்று சொன்னால் அது தவறு. பட்டா, பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் பிரதிவாதிகள் பெயரில் இருக்கும்போதும், மேலும், சுவாதீனம் பிரதிவாதிகள் பெயரில் உள்ளதால் நீங்கள் விளம்புகை பரிகாரம் கேட்கமுடியாது என்று சொன்னால் சரியல்ல. 1966 ஆம் ஆண்டு ரயத்துவாரி பட்டாவிற்கு பின்னிட்டு உங்கள் அனுபவத்தில்தான் வழக்குச்சொத்து உள்ளது என்பதற்குண்டான ஆவணம் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் அது தவறு.

முடியும் நேரம் **5.05** மணி

ஒம்/.K.H.இளவழகன்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.